**கவனிக்க** .–*14.03.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1855 - 2014 මාර්තු මස 21 වැනි සිකුරාදා - 2014.03.21

*1855 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 332 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 341 |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2014, ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மாச்சு மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, சித்திரை மாதம் 21 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மாசி 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | கேகாலை | பரணகுரு கோறளைப் பிரிவின் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி மற்றும் மாவத்தபற்று தெற்கு பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கேகாலை. |

3-400

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவி (நிறைவேற்றுச் சேவை தொகுதியின் III ஆம் தரம்) ஆட்சேர்ப்புச் செய்தல்

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு பின்வரும் தகைமைகளை உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளிடையே இருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக்குழு மூலம் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்படும்) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு ஏற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

2. **தேவையான தகைமைகள்**.- (i) ***கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்***.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து சட்டமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் ;

(ii) ***அனுபவம்***. - உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத செயற்படு நிலையிலான தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருத்தல் ;

(iii) ***உடல் தகைமை***.- பதவியின் கடமைகளை இலங்கையின் எப்பாகத்திலும் ஆற்றுவதற்கான உடல் மற்றும் உள தகைமைகளை சகல விண்ணப்பதாரிகளும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) ***ஏனையவை :***

- * தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி என்பவற்றில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.
- * இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;
- * விண்ணப்பதாரிகள் சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
- * பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்** .- (i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்தைக் கொண்டதுமாகும். விதவை/தபுதாரர்/அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தா செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனமானது மூன்று (3) வருடங்களுக்கான தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். சட்ட அலுவலர் III தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (3) வருடங்களினுள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிருவாக சுற்றறிக்கை 07/2007 இற்கு இணங்க மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கும் ஏற்ப பதவியில் இணைந்து ஐந்து (5) வருடங்களினுள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழி தொடர்பான குறித்தமட்ட தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டியதோடு, அரசகரும மொழி அல்லாத ஊடகமொழி மூலம் சேவைக்கு இணைந்த உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்தினுள் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) இந்த நியமனமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றுக்கு உட்பட்டதாகும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. ***சம்பள அளவுத் திட்டம்***.-இந்தப் பதவிக்கு ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 -17 x 1,050 - ரூபா 53,555 என்ற மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தானதாகும். (2006.04.25 ஆந் திகதியின் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இன் சம்பளக் குறியீட்டு இலக்கம் SL - I - 2006).

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் பின்வரும் புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும்:-

| விடயம் | | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் : | | 20 |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டமாணிப் பட்டம் | | |
| | - முதல் வகுப்புச் சித்தி | 20 | |
| | - இரண்டாம் வகுப்பு (மேல்) சித்தி | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு (கீழ்) சித்தி | 10 | |

| விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|
| சட்டக்கல்லூரி இறுதியாண்டுப் பரீட்சையில் முதல் வகுப்பு சித்தி | 15 | |
| சட்டக்கல்லூரி இறுதியாண்டுப் பரீட்சையில் இரண்டாம் வகுப்பு சித்தி | 10 | |
| குறிப்பு.- 1997 ஆம் ஆண்டுக்கு முன்னர் வகுப்புச் சித்தியுடன் சித்தியடைந்திருப்பின் 10 புள்ளிகள் மாத்திரமே வழங்கப்படவேண்டும். (அதிகூடிய தகைமைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும் - புள்ளிகள் சட்டமாணி பட்டத்திற்கு அல்லது சட்டக் கல்லூரி தகைமைகள் என ஏதேனும் ஒரு தகைமைக்கு மாத்திரமே வழங்கப்பட வேண்டும்.) | | |
| 2. மேலதிக தொழில்சார் தகைமைகள் : | | 15 |
| அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் பொருத்தமான துறைசார்ந்த ஒரு வருட காலத்திற்குக் குறையாத பட்டப்பின் டிப்ளோமா அல்லது பட்டப்பின் சட்ட டிப்ளோமா பாடநெறிக்காக (ஒவ்வொரு டிப்ளோமாவுக்கும் 5 புள்ளிகள் வீதம்) | | |
| அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் பொருத்தமான துறைசார்ந்த ஆறு மாத காலத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறி ஒன்று (ஒவ்வொரு டிப்ளோமாவுக்கும் 3 புள்ளிகள் வீதம்) | | |
| அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் பொருத்தமான துறைசார்ந்த மூன்று மாத காலத்திற்குக் குறையாத சான்றிதழ் பாடநெறிக்காக (ஒவ்வொரு பாடநெறிக்கும் 2 புள்ளிகள் வீதம்) | | |
| 3. மேலதிக அனுபவம் : | | 30 |
| சட்டத்தரணியாக அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் அனுபவம் - ஆறு மாதங்களுக்கு அதிகமான ஒரு வருடத்திற்குக் குறையாத - 2 புள்ளிகள் | | |
| ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் வீதம் உச்ச புள்ளிகள் 30 (அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான சட்டத்தரணியாக மூன்று வருடங்கள் சேவையாற்றிய சேவைக் காலத்தைத் தவிர்த்து) | | |
| (இருபது வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தை பூர்த்தி செய்த சட்டத்தரணி ஒருவரின் அல்லது ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவரின் அல்லது நீதிபதி ஒருவரின் மூலம் பெற்றுக்கொள்ளப் பட்ட சான்றிதழின் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.) | | |
| 4. கணினித் தேர்ச்சி : | | 15 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் தகவல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமாகக் கற்றிருத்தல். | 15 | |
| அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் 1 வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறி ஒன்றுக்காக அல்லது 1500 மணித்தியாலங்களுக்காக | 10 | |
| அரசாங்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் சான்றிதழ் பாடநெறிக்காக | | |
| - 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் | 07 | |
| - 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | 05 | |
| 5. ஆங்கில மொழி தேர்ச்சி | | 15 |
| ஆங்கில மொழி மூலம் தொடரப்பட்ட பட்டப்பின் படிப்பு/ பட்டப் படிப்பு/சட்டத்துறையில் பட்டப்பின் படிப்பு/ சட்டமாணிப் பட்டம் (குறித்த பரீட்சை வினாத்தாள்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழி மூலத்தில் விடையளிக்கப்பட் டிருத்தல் வேண்டும்.) | 15 | |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆங்கில மொழி தொடர்பாக டிப்ளோமா பாடநெறி ஒன்றுக்காக (1 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்) | 10 | |

| | விடயம் | | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆங்கில மொழி தொடர்பாக சான்றிதழ் பாடநெறி ஒன்றுக்காக<br>- 06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள்<br>- 03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் | <br><br><br>07<br>05 | |
| 6. | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டப்படும் திறமைகள் | | 5 |
| | மொத்த எண்ணிக்கை | | 100 |

7. **விண்ணப்பதாரிகளை உறுதிப்படுத்தல்.**- எல்லா வகையிலும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்தவர்களே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் என்பனவும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் அடையாளப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்:-

(i) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;

(ii). செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்.**- (i) விண்ணப்பப்படிவங்கள் 2014.04.21 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ii) அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி, இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவுள்ள தாளில் தயாரித்து இலக்கம் 01 தொடக்கம் 07 வரை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 08 தொடக்கம் 11 வரையான விடயங்கள் ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்குமாறு தயாரித்து தமது கையெழுத்துக்களினால் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவங்கள் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) அரசாங்க பாடசாலை, அதிபர் ஒருவர்/சமாதான நீதவான் ஒருவர்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர்/22,935 ரூபாவை மாதாந்த திரட்டிய சம்பளமாகப் பெறும் அரச சேவையின் நிரந்தர பதவி நிலை அலுவலர் ஒருவர் மூலம் விண்ணப்பப் படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) அரசாங்க அல்லது அரசாங்க மாகாண சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதம் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **பிழையான தகவல்களை முன்வைத்தல்.**- உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தகவல்கள் பிழையானவை அல்லது உண்மைக்குப் புறம்பானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் தெரிய வந்தால் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் அவ்வாறான பிழையான அல்லது உண்மைக்குப் புறம்பான தகவல்கள் முன்வைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கேற்ப வழிவகைகளுக்கு அமைய சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வது அல்லது பூர்த்தி செய்யாமல் இருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கே உள்ளது.

11.இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்

செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு,
'நிபுணதா பியச',
இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களம்**

சட்ட அலுவலர் பதவி (நிறைவேற்று சேவை வகையின் வகுப்பு III)

1. விண்ணப்பதாரியின் பெயர் :-----.
   (i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
   (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்கள்) :-----.
   (iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :
   (i) அலுவலக முகவரி :-----.
   தொலைபேசி இலக்கம் :-----.
   (ii) தனிப்பட்ட முகவரி :-----.
   தொலைபேசி இலக்கம் :-----.
   செல்லிடத் தொலைபேசி இலக்கம் :-----.
   (முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)
3. பிறந்த திகதி :-
   ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
6. பால் (பெண்/ஆண்) :-----.
7. குடியியல் நிலைமை :-----.
   (திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன)
8. கல்வித் தகைமை :
   (i) சட்டம் தொடர்பாக பட்டம் பெற்ற பல்கலைக்கழகம், திகதி மற்றும் மொழி மூலம் :-----.
   (ii) உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட திகதி :-----.
9. சட்டத்தரணியாக தொழில்சார் அனுபவம் :----- வருடங்கள்
10. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை / டிப்ளோமா | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின்/ பல்கலைக்கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

11. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்கத்துறை/ இடைநிலை அரசாங்கத்துறை/ தனியார்துறை போன்றன. |
|---|---|---|---|
| | | | |

12. கணினித் திறமை தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சி :-
பட்டம் :-----.
டிப்ளோமா :-----.
சான்றிதழ் பாடநெறி :-----.
13. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :-
ஆங்கில மொழிமூல பட்டம் :-----.
ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி :-----.
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி :-----.
14. நீர் இலங்கைப் பிரஜையாக இருப்பது பிறப்பினாலா/ பதிவு செய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும் :-----.
(பதிவு செய்ததன் மூலம் எனின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்)
15. நீர் அரசாங்க சேவை ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவரா ? :-----.
16. தற்போது அரசாங்க சேவையில் இருப்பின் உமக்கு எதிராக திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் ஏதேனும் உள்ளனவா? ................................
17. நீர் ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின், விபரங்களைக் குறிப்பிடவும் :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருடமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

திரு./திருமதி/செல்வி .............. அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ............................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :-----.

(இப்பகுதியானது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

**திணைக்கள/நிறுவன தலைவரின் உறுதிப்படுத்தல்:**

இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ............ அவர்கள் ..................... எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும் இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

...........................
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

(உத்தியோகபூர்வ முத்திரை)
திகதி :-----.

3-436

## அரசாங்க தகவல் திணைக்களத்தில் பிரசுரங்களை விநியோகிக்கும் உதவியாளர் பதவியில் இணைத்துக் கொள்வதற்கான திறந்த தேர்வு

அரசாங்க தகவல் திணைக்களத்தில் பிரசுரங்களை விநியோகிக்கும் உதவியாளர் பதவியில் இணைத்துக் கொள்வதற்கான திறந்த தேர்வுக்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

1. இந்த அறிவித்தலில் 'பணிப்பாளர் நாயகம்' என்ற சொற்களுக்கு பொருள்படுவது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் என்பதாகும்.

2. **நேர்முகப் பரீட்சை.-** நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளை பெறுபவர் திறமை அடிப்படையில் பதவியில் இணைத்துக் கொள்ளப்படுவார்:-

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பகுதிகள் | அதிக பட்ச புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வி தகைமைகள் | 20 |
| மேலதிக அனுபவம் | 40 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 35 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

3. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை.-** அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசுரங்களை விநியோகிக்கும் உதவியாளர் பதவியில் இணைத்துக்கொள்வதற்கான திறந்த தேர்வு மூலம் 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

4. **நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி.-** அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக் கப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்.-** அரச சேவையில் நியமனம் சம்பந்தமாக கடைப்பிடிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும், அப்படியான இணைத்துக் கொள்வதற்கான விதிமுறைகளில் அல்லது பின்பு இயற்றப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்ட விதத்தில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசுரங்களை விநியோகிக்கும் உதவியாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

6. தமக்கு வழங்கப்பட்ட பதவிக்கான பொறுப்பை குறிப்பிட்ட தினத்தில் பாரமெடுக்க முடியாமல் போனவிடத்து அல்லது நியமனம் வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை பொறுப்பேற்க மறுத்தாலோ அல்லது விலகிபோனாலோ விண்ணப்பதாரியின் நியமனத்தை ரத்துச் செய்ய அரச சேவை ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

7. **சம்பளம்/கொடுப்பனவுகள்.-** PL01-2006 (A) சம்பள திட்டத்தின் ஆரம்ப சம்பள ஏற்றடத்திற்கு சமமான கொடுப்பனவு மற்றும் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கை படி கொடுப்பனவும்.

8. **தகைமைகள்** : விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதியன்று.-

(i) கல்வித் தகைமைகள்: கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் இரண்டு பாடங்களில் திறமை சித்தி பெற்றுள்ளதுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) தொழில்சார் தகைமைகள் : தேவையற்றது.

(iii) அனுபவம் : தேவையற்றது.

(iv) உடற் தகைமைகள் : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் தேவைப்படும் பிரதேசத்தில் சேவையாற்றவும், பதவியின் கடமை நிமித்தம் பணியாற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக இயலுமானவராக இருத்தல் வேண்டும்.

(v) வேறு தகைமைகள்:

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
(2) சிறந்த பண்பாளராக இருத்தல் வேண்டும் ;
(3) பதவியில் இணைத்துக் கொள்வதற்கான சகல தகைமை களும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9. **வயது**.- குறைந்த பட்சம் : 18 வருடங்கள்; அதிக பட்சம் : 45 வருடங்கள்

10. **விண்ணப்பிக்கும் முறை.-** (அ) இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திலுள்ள விதத்தில் ஏ4(A4) அளவு தாளில் விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாக கருத்தில் கொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்ட சகல தகவல்களும் தமது கையெழுத்துக்களால் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ற விதத்தில் இல்லாத விண்ணப்பப் படிவமும் பூரணமான தகவல்களை வழங்காத விண்ணப்பப்படிவமும் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை தம்முடன் வைத்திருத்தல் உபயோகமாக இருக்கும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக உள்ளதாக என்பதை விண்ணப்பதாரி விசாரித்து உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி இல்லாவிடில் அந்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக்கூடும்.

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் ''அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05'' என்ற விலாசத்திற்கு 2014.04.15 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மூலையில் தெளிவாக "அரசாங்க தகவல் திணைக்களத்தில் பிரசுரங்களை விநியோகிக்கும் உதவியாளர் பதவிக்கு திறந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளல்" என்ற சொற்களை குறிப்பிடுதல் வேண்டும். அத் தினத்திற்கு பின்பு கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பப்படிவமும் பாரமெடுக்கப் படமாட்டாது.

(இ) சகல விதத்திலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் விண்ணப்பப் படிவம் காணாமல் போனது மற்றும் தாமதமாகிய சம்பந்தமான எந்தவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. விண்ணப்பதாரி சமர்ப்பித்த தகவல்கள் தெரிந்து கொண்டே தவறாக சமர்ப்பித்திருப்பதாக தெரியவந்தாலும், அப்படியில்லாது

ஏதாவது முக்கிய தகவல்களை அவர் வேண்டுமென்றே மறைத்திருந் தால் அவரை சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

12. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது ஒழுங்கு விதிகள் இருந்தால் அது சம்பந்தமாக அரசாங்க தகவல் பணிப் பாளர் நாயகத்தினால் தீர்மானம் எடுக்கப்படும்.

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தகவல் திணைக்களம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
கொழும்பு 5.
2014, பெப்புருவரி 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் பிரசுரங்களை விநியோகிக்கும் உதவியாளர் பதவியில் இணைத்துக் கொள்வதற்கான திறந்த தேர்வு**

1. தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்).
2. தனிப்பட்ட விபரங்கள்:-
2.1 முதலெழுத்தை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயரை ஆங்கிலத்தில் :- Mr./ Mrs./ Miss :-----.
(உதாரணமாக : SILVA A.B.)
2.2 முழுப் பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.
2.3 முழுப் பெயர் : (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2.4 தனிப்பட்ட விலாசம் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2.5 ஆணா/பெண்ணா : ஆண் - 0
பெண் - 1
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்).
2.6. விவாகமானவரா/விவாகமற்றவரா :
விவாகமற்றவர் - 1
விவாகமானவர் - 2
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்).
2.7 இனம் : (சிங்களம் -1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் -3, முஸ்லிம் - 4, ஏனையவர் -5)
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்).
2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :
2.9 பிறந்த திகதி :
ஆண்டு : மாதம் : திகதி :
2.10 தொலைபேசி இலக்கம் (இருந்தால்) :

3. கல்வித் தகைமைகள் :
முதலாவது தடவை : வருடம் :-----. பரீட்சை எண் :-----.

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

இரண்டாவது தடவை : வருடம் :-----. பரீட்சை எண் :-----.

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4. தொழில்சார் தகைமைகள் :-----.

5. அனுபவம் :-----.

6. **விண்ணப்பதாரி உறுதியுரை :**
மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் உறுதியுரைகின்றேன்.

.........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

3-437

---

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஆரம்ப அரை தொழில்நுட்ப சேவை தரத்தில் இணைத்துக் கொள்வதற்கான திறந்த தேர்வு (தயாரிப்பு சேவை உதவியாளர் (பராமரிப்பு))**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஆரம்ப அரை தொழில்நுட்ப சேவை தரத்தில் இணைத்துக்கொள்வதற்கான திறந்த தேர்வுக்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

1. இந்த அறிவித்தலில் 'பணிப்பாளர் நாயகம்' என்ற சொற்களுக்கு பொருள்படுவது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகமென்பதாகும்.

2. **நேர்முகப் பரீட்சை.-** நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிக புள்ளிகளை பெறுபவர் திறமை அடிப்படையில் பதவி III தரத்தில் இணைத்துக்கொள்ளப்படுவார்:-

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பகுதிகள் | அதிக பட்ச புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வி தகைமைகள் | 20 |
| மேலதிக அனுபவம் | 40 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 35 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

3. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை**.- அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஆரம்ப அரை தொழில்நுட்ப சேவை தரத்தில் இணைத்துக்கொள்வதற்கான திறந்த தேர்வு (தயாரிப்பு) சேவை உதவியாளர் (பராமரிப்பு) பதவியில் 01 வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

4. **நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி** :- அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப் படும்.

5. **சேவை நிபந்தனைகள்**.- அரச சேவையில் நியமனம் சம்பந்தமாக கடைப்பிடிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும், 2013.04.23 ஆந் திகதியில் அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஆரம்ப அரை தொழில்நுட்ப சேவை தரத்தில் இணைத்துக் கொள்ளும் விதிமுறைகளுக்கென இயற்றப்பட்ட சட்டங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்படியான இணைத்துக்கொள்வதற்கான விதிமுறைகளில் அல்லது பின்பு இயற்றப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்ட விதத்தில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி அரசாங்க தகவல் திணைக்களத்தின் தயாரிப்பு சேவை உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

6. தமக்கு வழங்கப்பட்ட பதவிக்கான பொறுப்பை குறிப்பிட்ட தினத்தில் பொறுப்பேற்க முடியாமல் போனவிடத்து மற்றும்/அல்லது நியமனம் வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை பொறுப்பேற்க மறுத்தாலோ அல்லது விலகிபோனாலோ விண்ணப்பதாரியின் நியமனத்தை ரத்துச் செய்ய அரச சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

7. **சம்பளம்**.- சம்பள குறியீட்டெண் : PL02-2006 (A) - சம்பள பரிமாண அளவு : ரூபா 12,210 - 10 x 130 -10 x 145-10 x160-12 x170 - ரூபா 18,600

தர நிர்ணயத்திற்கேற்ப ஆரம்ப முதல் சம்பள படிநிலை:

| தரம் | ஆரம்ப முதல் சம்பள ஏற்றம் ரூபா அளவு | ஆரம்ப சம்பள |
|---|---|---|
| III | ஏற்றம் 01 | 12,210 |
| II | ஏற்றம் 12 | 13,655 |
| I | ஏற்றம் 22 | 15,120 |
| விசேட | ஏற்றம் 32 | 16,730 |

(நியமன தினத்திலிருந்து 03 வருடத்திற்குள் 1 ஆவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் II வது தரத்திற்கு பதவியேற்றம் பெற்று 03 வருடத்திற்குள் 2 வது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தி பெற வேண்டியதுடன் I வது தரத்திற்கு பதவியேற்றம் பெற்று 05 வருடத்திற்குள் 3 வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்திபெறவேண்டியதுடன் 2007.05.28 ஆந் திகதி பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 க் கேற்ப இரண்டாவது அரச மொழி சம்பந்தமான தேர்ச்சியை பெறவேண்டும்.)

9. **தகைமைகள்** : விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதியன்று-

(i) கல்வித் தகைமைகள் : கல்வி பொது தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத வகையில் இரண்டு பாடங்களில் திறமை சித்தி பெற்றுள்ளதுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) தொழில்சார் தகைமைகள் : குறிப்பிட்ட பதவிக்கு ஏற்ற வகையில் இரண்டாம் தர கல்விக்கு அடுத்த மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை (NVQ) குறைந்த மட்டமாக இரண்டாவது மட்டத்தில் தொழில்நுட்ப திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) அனுபவம் : ஒவ்வொரு பதவிக்கும் ஏற்றவகையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 02 வருடங்களாவது பணியாற்றிய அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) உடற் தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் தேவைப்படும் பிரதேசத்தில் சேவையாற்றவும், பதவியின் கடமை நிமித்தம் பணியாற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக இயலுமானவராக இருத்தல் வேண்டும்.

(v) வேறு தகைமைகள்: (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) சிறந்த பண்பாளராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவியில் இணைத்துக்கொள்வதற்கான சகல தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

10. **வயது**.- குறைந்த பட்சம் : 18 வருடங்கள்; அதிக பட்சம் : 45 வருடங்கள்.

11.**விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திலுள்ள விதத்தில் ஏ4(A4) அளவு தாளில் விண்ணப்பப் படிவத்தை தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாக கருத்தில் கொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்ட சகல தகவல்களும் தமது கையெழுத்துக்களால் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ற விதத்தில் இல்லாத விண்ணப்பப் படிவமும் பூரணமான தகவல்களை வழங்காத விண்ணப்பப் படிவமும் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் போட்டோ பிரதியை தம்முடன் வைத்திருத்தல் உபயோகமாக இருக்கும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்ததாக உள்ளதாக என்பதை விண்ணப்பதாரி விசாரித்து உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி இல்லாவிடில் அந்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக்கூடும்.

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் பதிவுத் தபாலில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு 2014.04.15 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "அரசாங்க தகவல் திணைக்களத்தில் தயாரிப்பு சேவை உதவியாளர் (பராமரிப்பு) பதவிக்கு திறந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளல்" என்ற சொற்களை குறிப்பிடுதல் வேண்டும். அத் தினத்திற்கு பின்பு கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பப்படிவமும் பாரமெடுக்கப்படமாட்டாது.

(இ) சகல விதத்திலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் காணாமல் போனது மற்றும் தாமதமாகிய சம்பந்தமான எந்தவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12.விண்ணப்பதாரி சமர்ப்பித்த தகவல்கள் தெரிந்து கொண்டே தவறாக சமர்ப்பித்திருப்பதாக தெரியவந்தாலும், அப்படியில்லாது

ஏதாவது முக்கிய தகவல்களை அவரே வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

13. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது ஒழுங்கு விதிகள் இருந்தால் அதது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தகவல் திணைக்களம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
கொழும்பு 5,
2014, பெப்புருவரி 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஆரம்ப அரை தொழில்நுட்ப சேவை தரத்தில் பிரசுரங்களை விநியோகிக்கும் உதவியாளர் பதவியில் இணைத்துக் கொள்வதற்கான திறந்த தேர்வு**

1. தோற்றும் மொழி மூலம் :-
   சிங்களம் - 1
   தமிழ் - 2
   ஆங்கிலம் - 3
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்).
2. தனிப்பட்ட விபரங்கள்:-
   2.1 முதலெழுத்தை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயரை ஆங்கிலத்தில் :- Mr./ Mrs./ Miss :-----.
   (உதாரணமாக : SILVA A.B.)
   2.2 முழுப் பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.
   2.3 முழுப் பெயர் : (சிங்களத்தில்/தமிழில்) :-----.
   2.4 தனிப்பட்ட விலாசம் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
   2.5 ஆணா/பெண்ணா : ஆண் - 0
   பெண் - 1
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்).
   2.6. விவாகமானவரா/விவாகமாகாதவரா :
   விவாகமாகாதவர் - 1
   விவாகமானவர் - 2
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்).
   2.7 இனம் : (சிங்களம் -1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் -3, முஸ்லிம் - 4, ஏனையவர் -5)
   (ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்).
   2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   2.9 பிறந்த திகதி :
   ஆண்டு: மாதம் : திகதி :
   2.10 தொலைபேசி இலக்கம் (இருந்தால்) :
3. கல்வித் தகைமைகள் :-
   முதலாவது தடவை : வருடம் :-----. பரீட்சை எண் :-----.

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

இரண்டாவது தடவை : வருடம் :-----. பரீட்சை எண் :-----.

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4. தொழில்சார் தகைமைகள் :-----.
5. அனுபவம் :-----.
6. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் உறுதியுரைகின்றேன்.

..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

3-438

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சட்டவரைஞர் திணைக்களம்**

**சட்டவரைஞர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத பிரிவு 2 சேவை வகைக்குட்பட்ட பதிப்பாசிரியர் தரம் III மற்றும் ஆவண உதவியாளர் தரம் III ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2014**

சட்டவரைஞர் திணைக்களத்தின் பதிப்பாசிரியர் தரம் III மற்றும் ஆவண உதவியாளர் III ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் சட்டவரைஞர் திணைக்களத்தின் சார்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் கோரப்படுகிறது. இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி படிவத்திற்கமைய தயார் செய்யப்பட்ட

விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிடப்படும் திகதி அல்லது அதற்கு முன்னர் **பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்**. கடிதவுறையில் இடது பக்க மேல் மூலையில் "சட்டவரைஞர் திணைக்களத்தின் பதிப்பாசிரியர் தரம் III மற்றும் ஆவண உதவியாளர் தரம் III ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**(அ) விண்ணப்ப முடிவுத் திகதி.- 2014.04.21 ஆந் திகதியாகும்.**

**குறிப்பு.-** விண்ணப்பப்பத்திரம் அல்லது அது தொடர்பான கடிதமொன்று அஞ்சலில் தொலைந்ததாகவோ தாமதமாகியதாகவோ செய்யப்படும் எந்தவொரு முறைப்பாடு பற்றியும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்பத்திரங்களை தாமதித்து அனுப்புவதால் ஏற்படும் அசௌகரியங்களை விண்ணப்பதாரரே பொறுப்பேற்றல் வேண்டும்.

1. **ஆட்சேர்ப்பு முறை.-** திறந்த போட்டிப் பரீட்சையில சித்தியடைந் தோரில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்ப தாரர்கள் நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் நிலவும் வெற்றிட எண்ணிக்கைகளுக்கு ஏற்ப திறமை வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப் படுவர். நியமிக்கப்படுவோர் எண்ணிக்கை மற்றும் நியமனம் செல்லுபடியாகும் திகதி என்பன சட்டவரைஞரால் தீர்மானிக்கப்படும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-** (i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையது. விதவைகள், அநாதைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் மூன்று வருட (3) தகுதிகாண் காலத்துக்கு உட்படுத்தப்படுவர்.

(iii) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 07/2007(ii) இன் பிரகாரம் ஏனைய அரச கரும மொழிகள் தொடர்பான தேர்ச்சி மட்டத்தினை 5 ஆண்டுகளுக்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அரச கரும மொழிகள் அல்லாத ஒரு மொழி மூலத்தில் சேவையில் இணைந்த அலுவலர்கள் 03 ஆண்டுகளுக்குள் அதாவது தகுதிகாண் காலத்துக் குள் ஓர் அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் மற்றைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினை ஆறு ஆண்டுகளுக்குள் (6) பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகளுக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்படும்.

(v) தனக்கு வழங்கப்பட்ட பதிவியில் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் அல்லது நிராகரிக்கும் அல்லது வழிவிடும் விண்ணப்பதாரர்களது நியமனம் இரத்துச் செய்யப்பட இடமுண்டு.

3. **சம்பள அளவுத்திட்டம் :-** இப்பதவிக்கு 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சம்பள சுற்றறிக்கைக்கு ஏற்ப MNI- 2006A ரூ. 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூபா 22,040 (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

4. **கல்வித் தகைமைகள் / அனுபவம்.-** கல்வித் தகைமைகள் : க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம் ஆகியன உட்பட ஆகக் குறைந்தது 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல், மற்றும்

க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஆகக் குறைந்தது சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி அல்லதுஆங்கில மொழிகளில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு.-** (i) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மொழி மூலம் தொடர்பில் க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ.த) மொழிப் பாடங்களில் தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) க.பொ.த. (உ.த) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்திற்கு போதியளவு திறமைச் சித்தியினைப் பெற்ற அபேட்சகர்கள் எண்ணிக்கை காணப்படாதவிடத்து க. பொ. த. (உ.த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் ஆகிய மொழிகளுக்கு திறமைச் சித்தியினைப் பெற்றுள்ள க. பொ. த. (உ. த) பரீட்சையில் ஆங்கிலமொழியில் சித்தி அல்லது பொது ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தலானது ஒரு தகைமையாகக் கருதப்படும்.

அனுபவம் : ஆவண உதவியாளர் பதவிக்கான விண்ணப்ப தாரர்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க நிறுவன மொன்றில் கணினி நடவடிக்கைகள் தொடர்பாக ஆகக் குறைந்தது ஓராண்டு கால அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும். (Open Office - Microsoft office Word - Excel ஆகியன)

5. **வயதெல்லை.-** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் வயது 18 ஆண்டுகளுக்குக் குறையாமலும் 30 ஆண்டுகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. **தேகாரோக்கியம் தகைமை.-** (i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும்,

(ii) பதவியில் கடமை புரிவதற்கும், போதியளவு தேகாரோக்கியம் மற்றும் மனநிலை என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். (தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள் மருத்துவப் பரிசோதனைக் குட்படுத்தப்படுவர்).

7. **ஏனைய தகைமைகள்.-** (i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நற்பண்பினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதியில் பதவியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8.8.1 எழுத்துப் பரீட்சை : பதிப்பாசிரியர்

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடை வதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் எழுத்திலக்கணம் தொடர்பான அறிவினைப் பரீட்சித்தல் | 1 1/2 மணித் தியாலம் | 100 | 100 |

8.2 பாடத்திட்டம் :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம்/ |
|---|---|
| சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் எழுத்திலக்கணம் தொடர்பான அறிவினைப் பரீட்சித்தல் | செவ்வை பார்க்கும் திறமையினை மதிப்பீடு செய்வதற்காக விசேடமாக இத் திணைக்களத்தின் வெளியீடு களுடன் தொடர்புடைய செவ்வை பார்க்கும் பகுதிகள் இரண்டில் மற் றும் சரியான சிங்களம்/தமிழ்/ ஆங்கில எழுத்திலக்கணம் தொடர் பான அறிவினைப் பரீட்சிப்பதற் கான வினாவொன்றுடன் மூன்று வினாக்களைக் கொண்டு தயாரிக் கப்பட்ட ஒரு வினாப்பத்திரமாகும். |

8.2 பாடத்திட்டம் : ஆவண உதவியாளர்

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடை வதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 1 மணித்தி யாலம் | 100 | 40 |
| மொழி ஆற்றல் | 1 மணித்தி யாலம் | 100 | 40 |

8.2.1 பாடத்திட்டம் :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவு | பரீட்சார்த்தியிடமுள்ள பொது நுண் ணறிவு, தர்க்கரீதியான ஆற்றல், கருத்து விளக்கம், கணிப்பீட்டுத் திறமை மற்றும் புரிந்துகொள்ளும் ஆற்றல் என்பவற்றை மதிப்பீடு செய்யும் ஒரு வினாப்பத்திரமாகும். |
| மொழி ஆற்றல் | எழுத்திலக்கணம், இலக்கணப் பாவனை, சிக்கலற்ற மற்றும் தெளி வான கருத்து தெரிவித்தல், மொழிப் பிரயோகம் தொடர்பான அறிவு, சுருக்குதல் மற்றும் கட்டுரை எழுதும் ஆற்றல் என்பவற்றை மதிப்பீடு செய்யும் ஒரு வினாப்பத்திரமாகும். |

***கவனிக்கவும்.-*** தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் எழுத்திலிலக்கண பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். கையெழுத்துக்களை வாசிக்க முடியாத பரீட்சார்த்தி ஒருவரது பரீட்சை பரீட்சார்த்தி அந்தஸ்து இடை நிறுத்தப்படலாம்.

8.3 ***நேர்முகப் பரீட்சை.-*** மேற்போந்த ஒவ்வொரு வினாப்பத் திரத்திற்கும் 40% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்களுள் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்கள் (வெற்றிடங்களுக்குச் சமமான எண்ணிக்கை) சட்டவரைஞரி னால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீசைக் குழுவினால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் மற்றும் உடற்றகைமைகள் என்பவற்றைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சையொன்றிற்குட்படுத்தப்படுவர். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரர் ஒருவர் இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறான விண்ணப்பங்களை சமர்ப்பித் தல் வேண்டும்.

(ii) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும் விண்ணப்பதாரரொருவர் தனது விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். விண்ணப்பதாரர்கள் மீளளிக்கப்பட முடியாத 1,000 ரூபா விண்ணப்பக் கட்டணத்தை பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிறுவகம் எனும் பெயரில் சுதந்திர சதுக்கம் இலங்கை வங்கிக் கிளையின் 02323278 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதற்கு ஏற்றவாறு எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்த முடியும். பணம் செலுத்தும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும் ;

(iv) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது ;

(v) இப்பரீட்சை 2014, மே மாதம் கொழும்பில் நடாத்தப்படும் பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் ;

(vi) அரைகுறையான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு** : அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்தி உரிய அனுமதி அட்டையினை முதற் தடவையாக அம் மண்டபத்தில் தோற்றுகின்ற போதே பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்படலானது. அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளல் எனக் கருதப்படமாட்டாது.

(vii) விண்ணப்பப்பத்திரம், இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய 22 x 29 செ. மீ. அளவுடைய A4 தாள்களில் 1 தொடக்கம் 5 வரையான தலைப்புக்கள் முதற் பக்கத்திலும் 6 தொடக்கம் 11 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதனோடு தொடர்புடைய தகவல்கள் தனது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்ப அமையப் பெறாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அரைகுறையான விண்ணப்பப் படிவங்கள் என்பன எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(viii) விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன் எல்லா வகையிலும் பூர்த்தியான விண்ணப்பப்

படிவங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்பி வைப்பார்.

(ix) பரீட்சையை பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரத்தினை சட்டவரைஞர் கொண்டுள்ளார்.

(x) பரீட்சையை நடாத்துதல் அல்லது பெறுபேறு வெளியிடல் என்பன தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அவ்ஒழுங்குவிதிகள் மீறப்படுமிடத்து பரீட்சை ஒழுங்குவிதிகளின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்பட நேரிடும்.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொரு ஆவணம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்:-

(1) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு;
(3) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**கவனிக்க.**- (அ) விண்ணப்பப்பத்திரத்துடன் எந்தவித ஆவணங்களையோ அதன் பிரதிகளையோ இணைத்தல் கூடாது.

(ஆ) வேண்டப்படும்போது ஏற்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளது விண்ணப்பப் பத்திரங்கள் பற்றி கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பதாரர்கள் தமது மாதிரிக் கையொப்பத்தினை அரசாங்க பாடசாலை அதிபர்/ஓய்வு பெற்ற அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது 240,360 ரூபா அல்லது அதற்கு மேல் வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது உள்ளூராட்சி சேவை அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது நாயக்க தேரர் அல்லது பிறமதஸ்தாபனத்தைச் சேர்ந்த மதப் போதகர்களுள் குறிப்பிடத்தக்க ஓர் அந்தஸ்தில் உள்ள ஒருவரைக் கொண்டு உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

11. **பொய்யான தகவல்களை வழங்குதல்** : பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்த உரிமை பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் நிராகரிக்கப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனுமொரு விடயம் பொய்யானவை எனத் தெரிந்து கொண்டே சமர்ப்பிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாகக் கூடும்.

ஜீ. எஸ். ஏ. டி. சில்வா,
சட்டவரைஞர்.

சட்டவரைஞர் திணைக்களம்,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு

**சட்டவரைஞர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத பிரிவு 2 சேவை வகைக்குட்பட்ட பதிப்பாசிரியர் தரம் III மற்றும் ஆவண உதவியாளர் தரம் III ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2014**

பரீட்சை - பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தை பெட்டியில் எழுதவும்)

(இவ் அறிவித்தலின் 9(ii) ஆம் பந்தியின் பிரகாரம் ''மொழி மூலத்தை'' பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

1. 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(உதா.: SILVA A.B. (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்):-----.
1.3 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :---.
2.2 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
3. 3.1 பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
3.2 விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
4. பால் :
ஆண் - 0
பெண் - 1
5. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது:-
விவாகமானவர் - 01, விவாகமாகாதவர் - 02

6. கல்வித் தகைமைகள் :
(i) க.பொ.த. (சா.த.)

| ஆண்டு | பாடங்கள் | தரம் |
|---|---|---|
| | | |

(ii) க.பொ.த. (உ.த.)

| ஆண்டு | பாடங்கள் | தரம் |
|---|---|---|
| | | |

7. ஏற்புடைய ஏனைய கல்வித் தகைமைகள்/தொழிற்றகைமைகள் இருப்பின் குறிப்பிடவும் :-----.
8. தொழில்சார் அனுபவம் :-----.
9. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்.

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
பணம் செலுத்திய திகதி :-----.

பணம் செலுத்திய அலுவலகம் :-----.

| |
|---|
| |

10. இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மை யானவை என வெளிப்படுத்துகின்றேன். மேலும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளரினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கும் பெறுபேறு வெளியிடல் தொடர்பாக மேற்கொள் ளப்படும் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுவதாகவும் வெளிப் படுத்துகின்றேன். பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதி அற்றவர் எனக் காணப்படின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த உரிமையினை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் தீர்மானத்துக்கு நான் உடன்படுகின்றேன்.

..........................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

11. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிசெய்தல்**

இவ் விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கும் .......... (முழுப்பெயர்) என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும், .................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

....................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :-----
பதவி :-----.
முகவரி :-----.
பதவி முத்திரை :-----.
திகதி :-----.

3-645

---

## ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2014, பங்குனி

1991.05.17 ஆந் திகதியும் 662/11 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 07 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2014.05.25 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

**2. தகைமைகள்.**- இதுவரை இப்பரீட்சையைப் பூரணப்படுத்தாத ஆரம்ப தரத்தின் வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

**3. விண்ணப்பங்கள்.**- இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை போன்று விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2014.04.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் பாரமளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்தியபின் விண்ணப்பமானது, ''சுகாதார அமைச்சு, கொழும்பு 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, 'சுவசிரிபாய கட்டிடம்', பணிப்பாளர் (பரீட்சை)'' அவர்களுக்கு 2014.04.25 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 30.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுள்ள கடித உறையொன்றும் அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

**கவனிக்கவும்.**- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 1-4 (இ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 4(ஈ)-07 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**4. பரீட்சைக் கட்டணம்.**- (i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படுதலோ புரியப்படமாட்டாது.

**5. பரீட்சைக்கு உட்படுத்திக்கொள்தல்.**- (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவ் அனுமதி அட்டைகளை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்கப் படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப் படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) தேசிய அடையாள அட்டை ;
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

(இ) சாரதி அனுமதிப்பத்திரம் ;

(ஈ) கடவுச்சீட்டு

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக் கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப் பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.)

(சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk)

6. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல வினாப் பத்திரங்களையும் சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட் டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

7. **பரீட்சைப் பாடத்திட்டம்**.-

7.1 ***எழுத்துப் பரீட்சை***

7.1.1 தாபனவிதிக்கோவை

(நேரம் : 02 மணித்தியாலம்) 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(மொத்தபுள்ளிகள் - 100)

**பாடவிதானம்**

(i) தாபனவிதிக்கோவை

(அ) I ஆம் பகுதி - II, III, V, VI, VII, VIII, IX, XI, XII, XIII, XV, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII, XXXIII அத்தியாயங்கள்.

(ஆ) II ஆம் பகுதி - XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள்.

7.1.2 வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம்

(நேரம் : 1 1/ 2 மணித்தியாலம்) 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(மொத்தப் புள்ளிகள் - 100)

**பாடவிதானம்**

சுகாதாரக் கைநூல்

I ஆம் பிரிவு – வைத்திய சேவை

II ஆம் பிரிவு - இரசாயனகூட சேவை

7.1.3 கணக்கியல் :

(நேரம் : 02 மணித்தியாலம்) 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,

(மொத்தப்புள்ளிகள் - 100)

**பாடவிதானம்**

(I) **நிதிப் பிரமாணம்** -

I ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

II ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

III ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

IV ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

V ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

VI ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்

VII ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்

(II) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள்.

(III) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.

(IV) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணம்.

7.2 ***சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை***.- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் கொழும்பில் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். மொத்தப் புள்ளிகள் 100. தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும் பொழுது மேலோங்கும் நிகழ்வுகளின் பொருட்டு சிங்களத்தில் அல்லது தமிழ் மொழியில் கலந்துரையாடுவதற்கு உத்தியோ கத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

8. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் பிரிவில்/விசேட இயக்கத்தில்/நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலில் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே பின்பற்றப்பட வேண்டும்.

எம். பீ. எல். ரகுமான்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் II),
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்காக.

எனது இலக்கம் : சிஎப்/ஈஎக்ஸ்ஈ/02/2014
சுகாதார அமைச்சு,
“சுவசிரிபாய”,
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2014.03.07

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பிரயோகத்தின் பொருட்டு)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2014, பங்குனி**

1. (அ) (i) விண்ணப்பதாரரின் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :-----.
(ii) விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :-
(iii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.
(iv) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-

(ஆ) பதவி .- (i) (வைத்திய உத்தியோகத்தர்
(ii) பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் :-----.
(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :-----.
(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் "✓" அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் "X" குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச் சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம்
தாபன விதிக் கோவை
கணக்கியல்
சிங்களம் வாய்மொழி
தமிழ் வாய்மொழி

3. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:
(உரிய கூண்டினுள் (✓) அடையாளத்தை இடவும்)
சிங்களம் தமிழ் ஆங்கிலம்:

4. (அ) தற்பொழுது சேவையாற்றும் இடம் :-----.
(ஆ) அதற்குரிய மாவட்டம் :-----.
(இ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- (தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூண்டினுள் சரி (✓) அடையாளமிடுக.

| | | |
|---|---|---|
| கொழும்பு | களுத்தானை | அம்பாந்தோட்டை |
| களுத்துறை | காலி | பதுளை |
| குருநாகல் | அனுராதபுரம் | இரத்தினபுரி |
| கண்டி | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் |
| அம்பாறை | வவுனியா | |

(ஈ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுள்ள ரூபா 30.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறை யொன்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(உ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :---.
(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? :----.
(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :-----.

முத்திரைக் கூண்டு

6. **விண்ணப்பதாரரின் உறுதியுரை**.- எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப் படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

7. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................................. என்பவரை நான் நன்றாக அறிவதுடன், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாதபடியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு

அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுப் படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

**8. பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ் :**

திருவாளர்/திருமதி/செல்வி ........................................... என்பவர் ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்/பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்/ இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணபதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட
இயக்கத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(*தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

3-637

---

**சுகாதார அமைச்சு**

மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு -2014

சகாதார அமைச்சின் கீழ் மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு, 1837/8 ஆம் இலக்க 2013.11.19 ஆந் திகதியின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தாதிமார் சேவை யாப்பு விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டுள்ள விண்ணபதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.( தாதிமார் சேவை யாப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளின் தேவை கருதி ஆண் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்).

01. இங்கு சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை கருத்திற் கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு வருடத்தினதும் விண்ணப்ப எண்ணிக்கையின் விகிதசம அடிப்படையில் பிரிக்கப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு வருடத்திற்காகவும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ள அளவினை அவ்வாண்டின் ஏற்புடைய உயிரியல்/கணிதம் மற்றும் விவசாய விஞ்ஞானத்துறைகளில் விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விகிதாசார அடிப்படையில் பிரித்து அதன் பின்னர் உயர் Z பெறுமானத்தை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் இருந்து மாவட்ட அடிப்படையில் தகுதியுடையோர் தெரிவு செய்யப்படுவர்.

02. இப் பாடநெறி முழு நேரப் பாடநெறியாகும். ஐந்து வார நாட்கள் மற்றும் சனிக்கிழமை முற்பகலில், பல்கலைக்கழகத்தில் அல்லது சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு அரச நிறுவனத்தில் அல்லது வேறு நிறுவனங்களில் முழு நேர பாட நெறிகளில் பயிலும் மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது. யாரொருவர் அவ்வாறு விண்ணப்பித்து பிரிதொரு சந்தர்ப்பத்திலோ தெரிய வருமிடத்து அவரை பாடநெறியை/பதவியை விட்டு விலக்குவதுடன் அது வரை அரசினால் அவருக்காக செலவிடப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அறவிடப்படும். பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறு அரச நிறுவனங்களிலோ முழு நேர பாட நெறிகளில் பயிலுகின்ற ஒருவர் இதற்கு விண்ணப்பிக்க விரும்பினால் அவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்:-

2.1 2014.04.10 ஆந் திகதி ஆகும் போது நீங்கள் எந்தவொரு பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறு அரச நிறுவனத்திலோ முழு நேர பாடநெறிக்காக பதிவு செய்திருப்பின் மாணவ தாதி பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்படுமிடத்து தாதிப் பயிற்சிக்காக தாதிக் கல்லூரிகளில் பதிவு செய்யும் தினத்திற்கு முன்னர் குறித்த பயிற்சியின் அல்லது பாடநெறியின் பதிவை இரத்து செய்து கொள்ள வேண்டும்.

2.2 2014.04.10 ஆந் திகதியன்று நீங்கள் பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறு சுகாதார அமைச்சின் கீழ் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளிலோ பதிவு செய்யாதவராக இருப்பினும் தாதி பயிற்சிக்கு பயிலுனர்கள் பதிவு செய்யும் தினமாகும்போது பதிவு செய்திருப்பின் அவர்களும் மாணவ தாதி பயிற்சியில் பதிவு செய்துகொள்ள முன் அப்பாடநெறியின் பதிவினை இரத்து செய்துகொள்ள வேண்டும்.

2.3 சுகாதார அமைச்சின் கீழ் முழு நேர பயிற்சி பாடநெறிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளாயின் அவர்கள் மாணவ தாதிப் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அது வரை பெற்றுக் கொண்டு இருந்த பயிற்சி தொடர்பாக கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய ஒப்பந்த தொகையையும் மற்றும் அது வரை பெற்றுக் கொண்ட ஏனைய கொடுப்பனவுகளையும் செலுத்தி குறித்த பயிற்சியை விட்டு விலகினால் மாத்திரமே மாணவ தாதி பயிற்சிக்காக பதிவு செய்யப்படுவர்.

**கவனத்தில் கொள்க.**- (1) மேற்படி 2.1 தொடக்கம் 2.3 வரையாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்திருப்பினும் நீங்கள் போதுமானளவு Z பெறுமானத்தை பெறாத விடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திராவிடின், எவ்விதத்திலும் இப்பயிற்சிக்காகக தகைமை பெறாதவர் ஆவீர் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

(2) அவ்வாறே நீங்கள் போதுமானளவு Z பெறுமானத்தை பெற்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல நிபந்தனைகளை பூர்த்தி செய்திருப்பினும் 2.1 தொடக்கம் 2.3 வரை குறிப்பிடபட்டுள்ள நிபந்தகைகளை பூர்த்தி செய்யாதவிடத்து எவ்விதத்திலும் இப்பயிற்சிக்காக பதிவு செய்யப்பட மாட்டாது.

03. **கல்வித் தகைமைகள்.**- (அ) க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றி ஒரே அமர்வில் விஞ்ஞான துறை சார்ந்த உயிரியல்/கணிதம்/ மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஏதாவது ஒரு துறையில் அனைத்து பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த ) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) க.பொ.த. (சாதாரண) பரீட்சையில் சிங்கள் மொழி/ தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், ஆகிய நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

04. **ஏனைய தகைமைகள்**.- (அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2014.04.10 ஆந் திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(இ) உயரம் 4 அடி 10 அங்குலத்திற்கு (147.3cm) குறையாதிருத்தல்

(ஈ) திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

(உ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய, உடற் தகைமைகள் எல்லா வகையிலும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்திற்குள் விண்ணப்ப முடிவு திகதியான 2014.04.10 ஆந் திகதிக்கு கிட்டிய முன்னைய (03 ) வருடங்கள் தொடராக வசித்து இருக்க வேண்டும். தனது வதிவை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் குறித்த ஆவணங்கள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்:-

(1) 2014.04.10 ஆந் திகதிக்கு கிட்டிய முன்னைய 05 வருடங்களிற்குள் அவர் அம்மாவட்டத்தில் 03 வருடங்களாவது தொடர்ச்சியாக வசித்து இருக்க வேண்டும். ( இங்கு பிரதேச செயலாளரது மேலொப்பத்துடன் கிராம அலுவலரின் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

(2) தொடர்ச்சியாக 05 வருடங்கள் அம் மாவட்டத்தில் இரண்டாம் நிலைக் கல்வியை பெற்று இருக்க வேண்டும். (இதற்காக பாடசாலையிலிருந்து விலகிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

(3) விண்ணப்பதாரி குறித்த மாவட்டத்தில் பிறந்தவராக இருத்தல் (பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

(4) மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் இருந்து கிட்டிய முன்னைய 03 வருடங்களுக்குரிய வாக்காளர் பெயர்ப் பதிவேட்டின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு**: விண்ணப்பதாரியின் தந்தை அல்லது தாய் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் அல்லது கூட்டுத் தாபனங்களில் இடமாற்றக்கூடிய சேவையில் ,ஈடுபட்டு இருப்பின் அவ்விண்ணப்பதாரிக்கு தமது தாயினதோ அல்லது தந்தையினதோ பிறந்த மாவட்டத்தினை தனது மாவட்டமாக தெரிவு செய்ய முடியும். ( தந்தையினது / தாயினது பிறப்பு சான்றிதழ் அவர்களது தொழில் நிலையை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.)

05. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தினை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள இலக்கம் 01 முதல் இலக்கம் 09 வரை உள்ள பிரிவுகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 10 ஆம் பிரிவு இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 11 முதல் இலக்கம் 13 வரை உள்ள பிரிவுகள் மூன்றாம் பக்கத்திலும் இருக்கும் வகையில் விண்ணப்பங்களை தயாரித்து கொள்ள வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையிலுள்ள பெட்டியினுள் சரியான தகவலை கட்டாயமாக நிரப்ப வேண்டும்.

(ஆ) வீண்ணப்பத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி கடித உறையினுள் இட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் ''மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்ளல் - 2014'' மற்றும் வசிக்கும் மாவட்டத்தையும் குறிப்பிட்டு 2014.04.10 ஆந் திகதிக்கு முன்னர் ''பணிப்பாளர் (நிர்வாகம்) -01, சுகாதார அமைச்சு, ''சுவசிரிபாய'', 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10'' எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

(இ) இலங்கை நிர்வாக சேவையின் /கல்வி சேவையின் /அரசாங்கத்தின் கணக்காளர் சேவையின் / அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/ சமாதான நீதவான் / சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த ரூபா 2,40,360 இற்கு குறையாத சம்பளம் பெற்றுக் கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரியின் கையொப்பத்துக்கு மேலால் உள்ள கூட்டினுள் 300 ரூபா பெறுமதியான செல்லுபடியாகும் முத்திரையினை ஒட்டி தமது கையொப்பத்தை இட்டு அதனை செல்லுபடியற்றதாக்குதல் வேண்டும்.

06. பூரணப்படுதப்படுத்துபடாத , மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு முரணான, முத்திரை ஒட்டப்படாத மற்றும் 2014.04.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி இரத்து செய்யப்படுவதுடன், விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாகவும் அறிவிக்கப்பட மாட்டாது.

07. மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் Z பெறுமானத்திற்கு அமைய முன்னுரிமை அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர். சுகாதார செயலாளரால் நியமிக்கப்படுகின்ற நேர்முக சபையினால் சாதாரண நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு தாதி சேவையாப்பு விதிக்கோவை மற்றும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பரீட்சிக்கப்படுவதுடன் உடற் தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

08. நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் முதற் பிரதிகளையும் மற்றும் அவற்றில் தம்மால் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளையும் நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பிறகு சமர்ப்பிக்கப் படுகின்ற எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(அ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ;

(ஆ) க.பொ.த. (உ.தரம்) பரீட்சையின் பெறுபேற்றுச் சான்றிதழ்;

(இ) க.பொ.த. (சா.தரம்) பரீட்சையின் பெறுபேற்றுச் சான்றிதழ்;

(ஈ) தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் ;

(உ) மேல் 4 (ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள குடியிருப்பை உறுதிப்படுத்தவதற்கான ஆவணம்;

(ஊ) விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்தவதற்காக சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசி.

09. **பயிற்சித் திட்டம்**.- (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரர்கள் மாணவ ஆண்/பெண் தாதிமார்களாக தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்கு சேர்க்கப்படுவதுடன் அவர்கள் 03 ஆண்டுகள் பயிற்சிப் பாடத்திட்டம் ஒன்றை பயிலுதல் வேண்டும்.

(ஆ) பயிற்சியின் பொருட்டு சேர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவிலுள்ள சட்டதிட்ட கோவை ஒன்று பயிலுநர்களுக்கு வழங்கப்படும். இச் சட்டதிட்டங்களுக்கும் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய சட்ட திட்டங்களுக்கும் அவர்கள் கட்டுப்படல் வேண்டும்.

(இ) பயிற்சி பெறும் கால எல்லையினுள் குறிப்பிட்ட பரீட்சைகளில் தேர்ச்சியடையாத அல்லது செயற்பாடும் நடத்தையும் திருப்பியற்ற அல்லது பரீட்சை மற்றும் விடுமுறை நிபந்தனைகளை கடைப்பிடிக்கத் தவறும் பயிலுநர்களின் பயிற்சி எச்சந்தர்ப்பத்திலேனும் நட்டஈடு எதுவுமின்றி நிறுத்தப்படலாம். பயிற்சிக் காலத்தில் எந்த விதமான விடுமுறைகளுக்கும் உரித்தல்லாததோடு இக்காலத்தினுள் வரவின்மைக்கான விசேட கொடுப்பனவிலிருந்து விகித அடிப்படையில் ஒரு தொகை கழிக்கப்படும். அத்தோடு பரீட்சை எழுதுவதற்கு 80 % க்கு குறையாத வரவு இருத்தல் வேண்டும்.

(ஈ) தாதிமார் பாடசாலையொன்றில் பயிற்சி பெறும் காலத்தில் பயிலுநர்களுக்கு கீழே குறிப்பிடப்படும் வகையில் கொடுப்பனவு வழங்கப்படும்:-

(1) முதலாம் வருடம் - மாதத்திற்கு ரூபா 12, 920
(2) இரண்டாம் வருடம் - மாதத்திற்கு ரூபா 13, 040
(3) மூன்றாம் வருடம் - மாதத்திற்கு ரூபா 13, 160

பயிற்சியை திருப்திகரமாக பூரணப்படுத்திய பின்பு இறுதி பரீட்சையில் சித்தியடைந்த பயிலுநர்களுக்கு தாதிய உத்தியோகத்தர் III ஆம் தாதி பதவிக்கு குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் அப்பதவியில் உள்ள வெற்றிடங்களிற்கு அமைய சுகாதார செயலாளரினால் நியமனங்கள வழங்கப்படும்.

(உ) பயிற்சி பெறும் காலத்தில் பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை விட்டு சென்றால் பயிற்சிக் காலத்தில் அவருக்கு/ அவளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளையும் பயிற்சியின் பொருட்டு செலவிடப்பட்ட பணத்தையும் அவர்/ அவள் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடின் அப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. **விவாகமாகாத நிபந்தனைகளும் உடன்படிக்கைகளும்**.- (அ) சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை அனுப்பும் திகதியில் விவாகமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் பயிற்சி பெற்றுக் கொள்ளும் மூன்றாண்டு காலத்திற்குள்ளும் விவாகமாகாதிருத்தல் கட்டாயமாகும். அதனை உறுதிப்படுத்த சமாதான நீதவான் ஒருவர் முன் கையொப்பமிட்ட சத்தியக் கடதாசியினை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ)மாணவ தாதிமார், தாதிமார் பயிற்சிக் பாடசாலைக்கு சேர்க்கப்படும் பொழுது திருப்திகரமாக பயிற்சியை முடிப்பதென்றும், பயிற்சியை பூரணப்படுத்திய பின்பு குறைந்த பட்சம் 10 ஆண்டு காலம் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதென்றும் , சுகாதார பணிப்பாளர் நாயகத்துடன் பிணை ஒன்றிற்கும் உடன்படிக்கையொன்றிற்கும் உட்படுதல் வேண்டும். சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் இக்கால எல்லை காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும்.

11. **சேவையில் ஈடுபடும் நியதிகள்**.- (அ) பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு பொறுப்பு ஏற்காது. என்றாலும் பயிலுநர்கள் பயிற்சிப் பாடநெறிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்கள் என்பவற்றிற்கு ஏற்ப தாதி பதவி தரம் III இன் தாதி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிப்பது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படும்.

(ஆ)மேற்படி பயிற்சியின் பின்பு நடாத்தப்படும் இறுதிப்பரீட்சையின் பெறுபேறுகளின் பின் தரம் III தாதிய உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படும் இப்பதவியானது ஓய்வூதியத்துடன் கூடியதாகவும் என்பதுடன் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டும்.

(இ) III ஆம் தரத்தின் பிரிவின் பதவிநிலை தாதிமார் பதவிகளுக்கு மூன்று ஆண்டுகள் தகுதிகாண் நிலைக்காலத்திற்கு உட்படுத்தப்பட்டு நியமிக்கபடுவர்.

12. **சேவை நிபந்தனைகள்**.- (அ) சகல பயிலுநர்களும் பயிற்சி ஆரம்பிக்க முன்பு மருத்துவ சோதனை செய்து கொள்ள வேண்டும்.

(ஆ)பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (IV) இன் படி ரூபா 15,620-4 x 180-6 x 240-11 x 320-20 x 360-ரூபா 28,500 சம்பள அளவுத் திட்டத்தின் படி MT 7-2006 “A” இற்கமைவாக தாதி உத்தியோகத்தர்கள் III ஆம் தரத்தில் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களின் படி நியமிக்கப்படும்.

(இ) தாதிமார் சேவையில் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அரச சேவைகள் தொடர்பாக விதிக்கப்படும் சட்டங்கள், நியதிகள், மற்றும் விதப்புரைகளுக்கும் தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் அரச நிதிப் பிரமா ணங்களுக்கும், ஏனைய அரச சுற்று நிருபங்கள், விதப்புரை கள் மற்றும் அவற்றில் ஏற்படக் கூடிய மாற்றங்களுக்கும் அமைவாக செயற்படுதல் வேண்டும்.

(ஈ) கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் தொடர்பிலான தகவல் கவனமாகவும் சரியாகவும் விண்ணப்பப்படிவத்தில் நிரப்பல் வேண்டும். பயிற்சிக்காக சேர்க்கப்பட்ட பின்னரோ நியமனம் பெற்ற பின்னரோ மேற்படி ஆவணங்கள் பொய்யானவை என நிரூபனமானால், சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைபக்களத்திற்கு ஒப்படைப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனத்தை இரத்து செய்து பயிற்சியிலிருந்து / பதவியிலிருந்து நீக்குவதற்கு, மீண்டும் அரச சேவையில் சேர்க்கப்படுதோர் பட்டியலில் அவரது / அவளது பெயரை உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பயிற்சிக் காலத்திற்கு அவருக்கு / அவளுக்கு கொடுகட்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசு மேற்கொண்ட செலவுகள் மற்றும் பிணைத்தொகை என்பன அவரிடம் / அவளிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) பயிற்சிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்ப தாரிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் விடுதி வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு பொறுப்பேற்க மாட்டாது.

(ஊ) இப்பயிற்சிக் காலப்பகுதியினுள் தொழிற்சங்க நடவடிக்கை களில் ஈடுபடுவதற்கு அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கு எவ்வித உரித்தும் கிடையாது. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரியவரின் பயிற்சியிலிருந்து அகற்றவோ வேறு பொருத்தமான நடவடிக்கையினை எடுக்கவோ முடியும்.

(எ) இந்த வர்த்தமானியில் குறிப்பிடாத பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு சம்பந்தமாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார அமைச்சின்

செயலாளரின் முடிவே இறுதியானதாகும். இவ்வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகளுக்கிடையில் ஒவ்வாத் தன்மை காணப்படின், சிங்கள மொழியிலான பிரதியே செல்லுபடியான தாகும்.

வைத்தியர் வை. டி. நிஹால் ஜயதிலக,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு ,
"சுவசிரிபாய "
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
28.02.2014.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| மாவட்டம் : | |
| உயர்தர பாடத்துறை: | |
| உயர்தரம் சித்தியடைந்த வருடம் : | |
| மொழி மூலம் : | |

**சுகாதார அமைச்சு**

*மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2014*

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :-----.
   (ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
   (இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :---.
2. தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :-----.
3. (i) நிரந்தர முகவரி :-

   (ii) மாவட்டம் (ஆங்கிலத்தில்) :-----.

   (iii) தொலைபேசி இலக்கம் : -

   கையடக்க : | | | | | | | | | | |

   நிரந்தர : | | | | | | | | | | |
4. பிறந்த திகதி :-
   ஆண்டு :----- மாதம் :-----, திகதி :-----.
5. 2014.04.10 ஆந் திகதியில் வயது :-
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
6. பால் (பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக.)

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

7. நீங்கள் ஒரு இலங்கை பிரஜையா ?
   (பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக.)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. உயரம் :
   அடி :-----, அங்குலம் :-----. /சென்றிமீற்றரில் :-----.
10. (அ) கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சை (விஞ்ஞானப் பிரிவு பாடங்கள்)
    (1) வருடம் :-----. சுட்டிலக்கம் :-----.
    வெட்டுப்புள்ளி :-----. பாடநெறி :-----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத் திற்கு | பாடம் | தரம் | அலுவலக உபயோகத் திற்கு |
|---|---|---|---|---|---|
| 1. | | | 3. | | |
| 2. | | | 4. | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சை முதலாம் அமர்வு:-

(1) பரீட்சை வருடமும் மாதமும் :-----.

(2) சுட்டிலக்கம் :-----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத் திற்கு | பாடம் | தரம் | அலுவலக உபயோகத் திற்கு |
|---|---|---|---|---|---|
| 1. கணிதம் | | | 7. | | |
| 2. விஞ்ஞானம் | | | 8. | | |
| 3. தமிழ் | | | 9. | | |
| 4. | | | 10. | | |
| 5. | | | 11. | | |
| 6. | | | 12. | | |

இரண்டாம் அமர்வு:-

(1) பரீட்சை வருடமும் மாதமும் :-----.

(2) சுட்டிலக்கம் :-----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத் திற்கு | பாடம் | தரம் | அலுவலக உபயோகத் திற்கு |
|---|---|---|---|---|---|
| 1. | | | 7. | | |
| 2. | | | 8. | | |
| 3. | | | 9. | | |
| 4. | | | 10. | | |
| 5. | | | 11. | | |
| 6. | | | 12. | | |

11. ஏதாவது குற்ற செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித் துள்ளீரா ?
    (பொருத்தமான கூட்டில் குறியிடுக) ஆம் ☐
    இல்லை ☐
    ஆம் எனில் தயவு செய்து காரணத்தை குறிப்பிடுக :-----.

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

    (அ) இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும் சரியானதுமாகும்.

(ஆ) என்னால் கொடுக்கப்பட்ட உறுதியுரை பிழையென தெரியவரின் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நன்கு அறிவேன்.

| ரூபா 300 பெறுமதியான முத்திரை ஒட்டி அதன் மேல் கையொப்பம் இடுவதன் மூலம் இரத்துச் செய்யவும். |
|---|

....................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
விண்ணப்பதாரி .......................... எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ............... 2014 ஆந் திகதி இட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :-----.
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

3-411

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.